## சுருக்கம்

பாசனம் – ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்கள் – 2007–08ஆம் ஆண்டு – இரண்டாம் முறை புன்செய் பாசனம் (Second Turn) – கீழ்பவானி திட்டபிரதானக் கால்வாய் மற்றும் விரிவாக்கக்கால்வாய் ஒற்றைப்படை மதகுகள் மற்றும் சென்ன சமுத்திரம் பகிர்மானக் கால்வாய் இரட்டைப்படை மதகுகள் மூலம் பவானிசாகர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணித் துறை(எஸ்.1)துறை

அரசாணை (வாலாயம்) எண்.13 நாள் : 03.01.2008

சர்வஜித் – மார்கழி 18,
திருவள்ளுவர் ஆண்டு - 2038

படிக்க :

1) ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர், கடித எண்.38962/2007/அ1 நாள்:13.12.2007.
2) கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கடித எண்.அ1/37954/2007 நாள்: 13.12.2007.
3) பொள்ளாச்சி மண்டல தலைமைப் பொறியாளர் கடித எண்.தவஅ/அவ4/12501/98 நாள்: 17.12.2007.

------

ஆணை:

மேலே ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட ஈரோடு மற்றும் கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர்களின் இசைவின் அடிப்படையில், மேலே மூன்றில் படிக்கப்பட்ட பொள்ளாச்சி மண்டல தலைமைப் பொறியாளரின் கருத்துருவை ஏற்று, கீழ்பவானி திட்ட பிரதானக் கால்வாய் மற்றும் விரிவாக்கக் கால்வாயின் ஒற்றைப்படை மதகுகள் மற்றும் சென்னசமுத்திரம் பகிர்மானக் கால்வாய் இரட்டைப்படை மதகுகள் மூலம் ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களில் 96,591 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெற பவானிசாகர் அணையிலிருந்து 5.1.2008 முதல் 30.4.2008 வரை (66 நாட்கள் தண்ணீர் திறந்தும், 50 நாட்கள் தண்ணீர் நிறுத்தம் செய்தும்) 11,977 மில்லியன் கனஅடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்துவிட அரசு அனுமதியளித்து ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.ஆதிசேஷையா
அரசு செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர்,நீர்வள ஆதார அமைப்பு,
பொதுப்பணித் துறை,பொள்ளாச்சி மண்டலம்,கோவை.
மாவட்ட ஆட்சித் தலைவர், ஈரோடு.
மாவட்ட ஆட்சித் தலைவர், கரூர்.

நகல்
பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இகோ/உதிரி.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.